**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித் (VAT) பேரேட்டுக் கணக்கில் ரூபா 115,437 ஆக இருந்த போதிலும், இறுதிக் கணக்கில் அது ரூபா 102,543 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) ரூபா 12,894 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 249,600 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 249,600 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 303,310 தொகையான கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மற்றும் ஆண்டின் செலவினம் என்பன ரூபா 303,310 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,800 பெறுமதியான இரண்டு மின் கேத்தல்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது இரண்டு வருடங்களை விஞ்சாத தெரிவு செய்யப்பட்ட 09 வருமான மீதிகளுக்குரிய ரூபா 195,000 தொகையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன உதவி ரூபா 3,470,236 தொகை மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 3,470,236 தொகை என்பன கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டணத்திற்காக சிட்டையிடல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளிற்காக நடப்பாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 33,192,572 தொகை ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 8,025,689 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 6,022,477 தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

முற்பணப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் விரிவான பட்டோலைகள் இல்லாமையினால் ரூபா 31,563,228 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத் முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டம் (255 ஆவது அத்தியாயம்) | | |
| (i) 145(2)(1) ஆம் பிரிவு | - | 3 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மதிப்பீடு செய்யப்பட வேண்டிய மதிப்பீட்டு வாடகையைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 145(1)(ஆ) ஆம் பிரிவு | - | வாடகை உடன்படிக்கைக்கும் அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை செலுத்துவதன் கீழ் சபையின் சந்தையில் வியாபாரம் செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் கவனம் செலுத்தாத சந்தைக் கடையொன்று அவதானிக்கப்பட்டது. |
| (iii) 145(4)(1) மற்றும் 136(அ) ஆம் பிரிவு | - | சபையின் வியாபாரக் கடைகள் தொடர்பாக வாடகை நிபந்தனைகளை புறக்கணிக்கும் போது எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டிய வழிமுறைகள் எடுத்தல் மற்றும் அந்த வியாபாரக் கடைகளுக்குரிய மலசலகூட வசதிகளை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நி.பி 104(1) | - | வொல்வோ வகையான தீ அணைப்பு வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2001 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 15/2001 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | கைவிரல் அடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்கை நேரங்களை கவனத்தில் கொள்ளாமல் வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | உள்ளூராட்சி ஆணையாளரின் LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | உப வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,467,270 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,650,545 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 26,783,000 | 28,689,048 | 33,724,921 | 14,091,195 | 26,830,000 | 27,937,451 | 34,410,644 | 19,354,776 |
| வாடகை | 6,600,000 | 7,348,457 | 7,120,244 | 534,935 | 11,650,000 | 6,960,435 | 7,823,426 | 1,033,533 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,000,000 | 334,155 | 334,155 | - | 100,300 | 637,894 | 637,894 | - |
| ஏனைய வருமானம் | 500,000 | 515,775 | 313,763 | 287,974 | 420,000 | 472,794 | 931,769 | 42,981 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 18,614,199 தொகையான ஆதனவரி தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 10,308,484 தொகை அதாவது 55 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் ரூபா 22,329,294 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 16,839,144 தொகை அதாவது 75 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 13,795,865 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 8,305,715 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை மீதியாகும். நீண்டகாலமாகக் காணப்படுகின்ற நிலுவை ஆதனவரி தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

#### (ஆ) களியாட்ட வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை களியாட்ட வரி வருமானம் ரூபா 511,869 ஆக இருந்ததுடன் வருடாந்த சிட்டையிடல் ரூபா 4,175,373 ஆகும். ஆண்டின் பெறுவனவுகள் ரூபா 4,391,915 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 295,329 ஆகும்.

**2.2.3 வாடகை**

**(அ) கடை வாடகை**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 194,458 தொகையான கடை வாடகை நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது அதில் 167,458 தொகை அதாவது 86 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் கடை வாடகை சிட்டையிடல் ரூபா 6,531,662 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 6,311,702 தொகை ஆண்டின் போது அறவிடப்பட்டமையால் மேலும் அறவிட வேண்டியுள்ள மீதி ரூபா 219,960 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டிற்குரிய வாடகையை உரிய ஆண்டின் போதே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சாறானந்த மாவத்தையில் சபைக்குச் சொந்தமான 110 சந்தைக் கடைகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அதில் சில கடைகள் அதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் மாத்திரம் காணப்பட்டது. மூடப்பட்டிருந்த 24 கடைகளில் சில கடைகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருந்து வருகின்றமையும் திறக்கப்பட்டுள்ள 54 கடைகள் உபவாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iv) சமமான 36 கடைகளையுடைய துறுசெவன வியாபாரக் கொட்டகைத் தொகுதியின் 14 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் 04 கடைகள் மூடப்பட்டிருந்தது. 03 கடைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(v) கங்கபட வீதியில் 13 வியாபாரக் கடைகள் முதல் தடவையாக வாடகையாளர்களுக்கு வழங்கும் போது உடன்படிக்கையில் செல்லுபடிக்காலம் குறிப்பிடப்படாமையினால் அந்த உடன்படிக்கையை புதுப்பித்து கட்டணத்தைத் திருத்தம் செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ஒரு கடையிலிருந்து மாத்திரம் நிலுவை வாடகை அறவிட வேண்டியிருந்தது.

(vi) களுத்துறை வடக்கு சந்தைக் காணியில் உள்ள புதிய கடைத் தொகுதியில் உள்ள 08 கடைகளில் 04 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 02 கடைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது. 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளின் பொது முதல் தடவையாக வாடகைக்கு வழங்கப்பட்ட இந்த சந்தைக் கடைகளின் வாடகை உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டு வரைபுதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாதாந்த வாடகையும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) படு கபடா வீதி புதிய சந்தைத் தொகுதியில் உள்ள 53 கடைகளையும் வாடகைக்கு வழங்குவதற்காக முதல் தடவையாக உடன்படிக்கை கைச்சாத்திடும் போது உடன்படிக்கையின் காலம் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அந்தக் கடைகளில் அனேகமானவை உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடைகளின் வாடகையாளர் மரணமடையும் போது வாடகை உரித்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் கடைகள் மாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் மூடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்டன.

(viii) புதிய கடைத் தொகுதியின் தரை மாடியில் உள்ள 10 கடைகள் 1986 ஆம் ஆண்டின் போது முதல் தடவையாக வாடகை உடன்படிக்கை

கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டு வரை அந்த உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஒரு கடை உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ix) கட்டுகுறுந்த சந்தைக் கடைகளுக்காக வாடகை உடன்படிக்கைகளைச் செய்யும் போது உடன்படிக்கைகள் காலம் குறிப்பிடப்படாமையினால் அந்த உடன்படிக்கையில் 2017 ஆம் ஆண்டு வரையும் புதுப்பிக்கப்படாதிருந்ததுடன் 03 கடைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது.

**(ஆ) வாடகை**

--------------

வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 04 காணிக் கூறுகளுக்காக 2007 ஆம் ஆண்டு முதல் வாடகை திருத்தப்படாதிருந்ததுடன் அந்த வாடகையாளர்கள் 2017 ஆம் ஆண்டிற்காக வாடகைப்பணம் செலுத்தியிருக்கவில்லை.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

------------------------------------

மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டணம் சிட்டையிடப்படாதிருந்ததுடன் ஆண்டிற்குரிய பட்டோலைகளைத் தயாரித்து பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

--------------

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்படாத மூலதன செலவினத்தின் கீழ் சபையின் 19 வேலைகளை அமுல்படுத்துவதற்காக ரூபா 18,072,357 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

------------------------------------------------------

2017 ஆம் ஆண்டிற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 65,469,131 செலவினமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கோ அல்லது குறைத்துக் கொள்வதற்கோ ஏற்ற வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கழிவுப்பொருள் வரியாக ரூபா

403,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன், கழிவுப்பொருட்கள் கொண்டு குவிக்கப்படுகின்ற காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமும பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்தல் தொடர்பாக சபையினால் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொதுமக்கள் நலன்புரி நோக்கங்கள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்படாமை**

சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 நடைமுறைக் கணக்குகளின் மீதி ரூபா 41,981,926 ஆகும். மேலும், ரூபா 63 மில்லியன் தொகை நிலையான வைப்பில் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக ரூபா 52,640 சேமிப்பாக இருந்தது. இதன் பிரகாரம் சபையின் நிதி நிலைமை நல்லாளுகை மட்டத்தில் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்காக சபையினால் அமுல்படுத்தப்பட்ட மூலதன செயற்திட்டங்களின் எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 18,072,357 ஆகும். சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சபையின் அதிகாரப் பணிகள் மற்றும் இலக்குகளை அமுல்படுத்தும் அதிகாரியாக செயலாளரால் பொதுமக்களின் கோரிக்கை, முன்மொழிவுகள், கருத்தினைப் பெற்றுக்கொள்ளும் முறைமைகளைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும், இதுவரையும் மீளாய்வாண்டின் போது செய்யப்படாமையினால் பொதுமக்களின் நலன்புரி நோக்கங்களை நிறைவேற்றும் பொறுப்பு சரியான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

**தீயணைப்பு சேவைப் பிரிவின் சேவையும் வருமான சேகரிப்பும்**

(அ) நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே தீயணைப்பு சேவைகளை வழங்குதல், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக தீ அபாய நிவாரண சான்றிதழ் வழங்குதல், கட்டிடத் திட்டம் மற்றும் தீ பாதுகாப்பு முறைமையை உறுதிப்படுத்துதல், நோயாளர் காவும் வண்டிச் சேவைகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக உப விதியொன்றை அங்கீகரித்து கட்டணம் அறவிடும் முறைமையொன்று சபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது நோயாளர் காவும் வண்டிச் சேவை சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கட்டணம் அறவிடும் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட போதும் உப விதியொன்று அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அந்த சேவை கைவிடப்பட்டிருந்தது.

(இ) ரூபா 51,000,000 பெறுமதியான தீயணைப்பு வண்டியின் காப்புறுதித் தவணைப் பணம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 625,378 ஆகவும், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 556,943 ஆகவும் இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது வாகனத்தின் பெறுமதியில் 10 சதவீதத்திற்குச் சமமான அதாவது ரூபா 5,100,000 தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டதன் காரணமாக காப்புறுதித் தவணைப் பணம் ரூபா 42,607 ஆகக் காணப்பட்டது. காப்புறுதி செய்யப்பட்ட காப்புறுதி பெறுமதி குறைக்கப்பட்டமையால் வாகனத்திற்கு ஏதாவது திடீர் விபத்து ஏற்படுமாயின் முழுமையான நட்டத்தையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) செயலாளர் பதவியின் வேலைகளை மேவுகை செய்வதற்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்தில் பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் இலக்கம் 25/2014 இன் பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்ட 06 ஊழியர்கள் ஆரம்பப் பிரிவின் பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த போதும், இந்த ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டாம் நிலை பதவியணியில் 09 பதவிகளுக்காக 19 உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், ஆரம்ப பதவியணியில் 08 பதவிகளுக்காக 16 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஈ) செயற்திட்ட அடிப்படையில் 04 பதவிகளுக்காக 13 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2015 சனவரி 01 முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் ரூபா 4,541,754 தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த பணத்தை 10 சதவீத காலரீதியான நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் ரூபா 450,000 தொகைக்கு மேற்பட்ட வட்டி வருமானத்தைப் பெற முடியுமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த மூன்று வாகனங்கள் பதிவு செய்யப்படாமல் சில வருடங்களாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மோட்டார் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படாதிருந்ததுடன் வாகனங்களுக்காக பேணப்படுகின்ற சம்பவத் திரட்டுப் புத்தங்களும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. வருமான அனுமதிப்பத்திரம் பெறாமலும், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யாமலும் 04 வாகனங்கள் வீதம் காணப்பட்டதுடன் குறித்த திகதியில் வருமான அனுமதிப்பத்திரம் பெறாமையினால் சபைக்கு ரூபா 10,280 தொகையான தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் 07 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையும், செலவினம் 04 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | கணக்குகளிலிருந்து கைவிடல், குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டிருந்தமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிலுவை வருமான அறவிடல் போதியளவான மட்டத்தில் காணப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) | வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை. |
| (ஈ) வாகனப் பயன்பாடு | (i) | மைலோ மீற்றர் செயலற்றுக் காணப்பட்டமை. |
| | (ii) | சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளதுவரையாக்கப்படாமை. |
| | (iii) | வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாமை |
| | (iv) | மெய்மையாய்வுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட அகற்றுதல்கள் மேற்கொள்ளப்படாமை |
| (உ) ஊழியர் முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் முறைமைப்படுத்தப்படாமை |
| | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |